கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



கம்பைநல்லூர் பேரூர்,
தருமபுரி மேற்கு மாவட்டம்.



ஜெயங்கொண்டம் மேற்கு ஒன்றியம்,
அரியலூர் மாவட்டம்.



கோபிச்செட்டிப்பாளையம் மத்திய ஒன்றியம்,
ஈரோடு வடக்கு மாவட்டம்.



கொடைக்கானல் மத்திய ஒன்றியம்,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



கோபாலசமுத்திரம் பேரூர் கழகம்.
திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்.



தொரப்பாடி பகுதி,
வேலூர் மாவட்டம்.

### நீலகிரி மாவட்டத்தில்

## கட்டிடங்கள் கட்டுமான வரைவிதிகள்!

### அமைச்சர் சு.முத்துசாமியை அரசு தலைமை கொறடா கா. ராமச்சந்திரன் சந்தித்து கோரிக்கை!



சென்னை, செப்.10-

நீலகிரி மாவட்டத்தில் 1993 ஆம் ஆண்டில் அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் முதன்மை திட்டத்தின் அடிப்படையில் கொண்டு வரப்பட்ட கட்டிடங்கள் கட்டுமான வரை விதி சட்டத்தின் மூலமாக நீலகிரி மாவட்டத்தில் ஏழை எளிய மக்கள் கட்டிடங்களுக்கு அனுமதி பெற மிகக் கடினமான விதிமுறைகள் இருந்ததின் காரணமாக மாவட்டம் முழுவதும் சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டிடங்கள் அனுமதி பெறாமல் பொதுமக்கள் கஷ்டப்படுகின்றனர்.

இந்நிலையில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று திராவிட மாடல் ஆட்சிநாயகர் தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அவர்களின் உத்தரவின்படி, நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களின் ஆலோசனைக்கிணங்க, நேற்று முன்தினம் (8.09.2025) தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், தமிழ்நாடு வீட்டு வசதி துறை அமைச்சர் முத்துசாமி அவர்களிடம் நேரில் சந்தித்து நீலகிரி மாவட்டத்தில் இருக்கும் கட்டிட கட்டுமான வரைவிதி சட்டத்தின் உண்மைத்தன்மையையும், பொதுமக்களின் கஷ்டங்களையும் எடுத்துக் கூறி இச்சட்டத்தினை தளர்வு செய்து மலை மாவட்ட மக்களுக்கு எளிமையான முறையில் அமைத்து, அனுமதி பெற எழுத்து மூலமாகவும் நேரடியாகவும் கேட்டுக் கொண்டார்.

இக்கோரிக்கையை ஏற்று வீட்டு வசதி துறை அமைச்சர் கூறும் போது நீலகிரி மக்கள் கோரிக்கை ஏற்று உடனடி தீர்வு காணப்படும், மேலும் அதிகாரிகளுடன் நீலகிரி மாவட்டத்திற்கு வருகை புரிந்து மாவட்ட அதிகாரிகளுடனும் மக்களுடனும் கலந்துரையாடி விரைந்து தீர்வு காணப்படும் என்று உறுதி அளித்தார்.

இந்நிகழ்வின் போது வீட்டு வசதித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா உட்பட அரசுத் துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்.

### எண்ணற்ற மக்களின் வாழ்வை மேம்படுத்தி வரும்

## இயன்முறை மருத்துவர்கள் மருத்துவத் துறையின் மிக முக்கிய அங்கம்!

### உலக இயன்முறை மருத்துவ நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, செப். 10-

உலக இயன்முறை மருத்துவ நாளையொட்டி இயன்முறை மருத்துவர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ள முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், "எண்ணற்ற மக்களின் வாழ்வை மேம்படுத்தி வரும் இயன்முறை மருத்துவர்கள் மருத்துவத் துறையின் மிக முக்கிய அங்கமாக இருக்கிறார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**உலக இயன்முறை மருத்துவ நாளில் இயன்முறை மருத்துவர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகள்.**

**நமது மருத்துவத் துறையின் மிக முக்கிய அங்கமாக இயன்முறை மருத்துவர்கள் இருக்கிறார்கள். மக்களின் உடல்நலத்தினை மேம்படுத்துவதிலும், உடலியக்கத்தைச் சீர்ப்படுத்துவதிலும், சுதந்திரமாக இயங்குவதிலும், பிறர் துணையை நாடாமல் வாழவும் இயன்முறை மருத்துவம் எனும் பிசியோதெரபி மிகப் பெரும் பங்காற்றி வருகிறது. எண்ணற்ற மக்களின் வாழ்வை மேம்படுத்தி வரும் இயன்முறை மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் நம் அனைவரின் போற்றுதலுக்கு உரிய வர்களாகத் திகழ்கிறார்கள்.**

**அவர்களின் பணியைப் பாராட்டி, அத்துறை மேலும் வளர்ச்சி பெற்று, மானுட சமுதாயம் பயன் பெற இந்நாளில் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.



நாகை மாவட்ட தி.மு.க.அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கையில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, 40 சதவீதத்திற்கும் மேல் உறுப்பினர்கள் சேர்த்த ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்களுக்கு பாராட்டு தெரிவித்தல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் ஒருங்கிணைப்பாளர், துணை ஒருங்கிணைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டத்தில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிறப்புரையாற்றினார். உடன் மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன், முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், தொகுதி பார்வையாளர்கள் ஆர்.அருள்செல்வம், இரா.சங்கர், ஜெயபிரகாஷ், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர் மற்றும் பலர் உள்ளனர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (08.09.2025) சுற்றுலாத் துறை மற்றும் சர்க்கரைத் துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் தலைமையில், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் செயலாட்சியர்கள் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் அரசு உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## திருவள்ளூரில் ஆசிரியர் தினவிழா!

திருவள்ளூர், செப். 10–

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிப்பூண்டி ஒன்றியம், கவரைப்பேட்டை அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் முன்னாள் மாவட்ட செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் பங்கேற்று பள்ளி மாணவ மாணவிகளுக்கு மற்றும் ஆசிரியர் பெருமக்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் மு.மணிபாலன், மோகன்பிரசாத், பிரபா, ராஜ்குமார், லால் மற்றும் பள்ளி மேலாண்மை குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பங்கேற்றனர்.



தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் ஆகியோர் தொடங்கி வைத்தனர். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம், ஒன்றியச் செயலாளர் சு.முருகானந்தம், பொதுக்குழு உறுப்பினர் சர்க்கரை ஆலை குமார் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் உள்ளனர்.

## தி.மு.க. தொண்டர் அணி மாவட்ட அமைப்பாளர் நியமனம்

### தி.மு.க. தொண்டர் அணிச் செயலாளர் பெ. சேகர் அறிவிப்பு

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. தொண்டர் அணியின் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அமைப்பாளர் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்.

**கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்**

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் வேலுமணி அவர்கள், நகரக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவரை அமைப்பாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **கே.பிரபுகிருஷ்ணா** (மிட்டப்பள்ளி, பாலிநாயனப்பள்ளி, பர்கூர் வடக்கு, கிருஷ்ணகிரி மாவட்டம்) அவர்கள் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.
நாள் : 08-09-2025.

**மாஸ்டர் பெ. சேகர்**
செயலாளர்,
**தி.மு.க. தொண்டர் அணி**



தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகராட்சி மண்டலம் 2, வார்டு 22, சாந்தி நகரில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ 63 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட பூங்காவை தஞ்சை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், மாநகராட்சி மேயர் க.சரவணன், ஒன்றியச் செயலாளர்கள் உள்ளூர் டி.கணேசன், ஜெ.சுதாகர், மாநகர ஆணையர் காந்திராஜ் உள்ளிட்ட மாநகரக் கழக நிர்வாகிகள், மண்டலக் குழுத் தலைவர்கள், பகுதிச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் உள்ளனர்.